முருகப்பெருமான் துணை

**மகான் வரரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.06.2022, செவ்வாய்கிழமை

1. கருணை கொண்டு கலியினில்
கந்தவேலனிடம் வரமாக
தருமபலம் பெற்று வந்தநல்
தவராஜனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது விடை திங்கள்
வரங்களென முப்பானோர் திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 31 ம் நாள், 14.06.2022 செவ்வாய்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே வரரிஷி யானும்
தரணியே நலமுற உரைப்பேன்
அண்ணலாக அரங்க ஞானி
அருளும் தரும வழிகள் தன்னை
4. தன்னையே உயர்வழிகளாக
தரணியோர் ஏற்று நன்கு
அன்னதான சேவை தொடர
அறநெறி அகிலமெங்கும் பரவ
5. பரவவே பெருமாற்றம் உண்டு
பழுதில்லா ஞானவான்களாக
தரும வழி துணையாய் நின்று
தவபலமுமாக வந்தருளக் கூடும்
6. கூடவே குருவரங்க மகான்
குறைதீர்க்கும் மகா சக்தியாக
ஈடேற்றம் பிரணவக் குடிலில்
இறைசக்தியாக நிரம்பி அருள
7. அருள்பொருள் வளம்பெற
அமைதி பாதுகாப்பும் பெற
வரமென விருப்பம் யாவும்
வலிய வந்து நிறைவுபெற
8. நிறைவுபெற வருங்காலமெனும்
நிகழ்வுகளை அறிந்துணர்ந்து
குறைவிலா தெளிவு பெற
குருபரனான அரங்கன் திருவடி போதும்
9. போதுமப்பா புண்ணிய மலரடி
புரிந்து தெளிந்து தொடர
பூதலமே அமைதி மகிழ்வு
புதுமை கண்டு நிறைவு காணும்

10. காணவே கலிவாழ் மக்களே
கந்தனாக வாழும் ஞானி
ஞான தேசிகனை அடைந்திட
நாளை கடத்தா உலகமக்களே

11. மக்களே சடுதி குடிலை நோக்கி
மனமுவந்து சரணடைவு கண்டுவர
ஆக்கமுடன் ஞானவான்களாகி
அகிலம் மாற்றுவீர் அருளாசிமுற்றே

–சுபம்–